சிறப்பிதழ்
**Special Issue**

*Chief Editor*
*Dr. M. Sadik Batcha*

*Advisory Editor*
*Dr. N. Chandra Segaran*

*Editorial Board*
*Dr. MAM. Rameez*
*Dr. Jeyaraman*
*Dr.A. Ekambaram*
*Dr. G. Stephen*
*Dr. S. Chitra*
*Dr. S.Senthamizh Pavai*
*Dr. A. Shunmughom Pillai*
*Dr. P. Jeyakrishnan*
*Dr. Seetha Lakshmi*
*Dr. S. Easwaran*
*Dr. Kumara Selva*
*Dr. Ganesan Ambedkar*
*Dr. Krishanan*
*Dr. Kumar*
*Dr. S. Kalpana*
*Dr. T. Vishnukumaran*
*Dr M. N. Rajesh*
*Dr. Govindaraj*
*Dr. Uma Devi*
*Dr. Senthil Prakash*
*Dr. Pon. Kathiresan*
*Dr. S. Vignesh Ananth*
*Dr.M. Arunachalam*
*Dr. S. Bharathi Prakash*

**01 மார்கழி 2052**
**16th December 2021**

**ISSN : 2321 - 984X**

# நவீனத் தமிழாய்வு

*(பன்னாட்டுப் பன்முகத் தமிழ் ஆய்விதழ்)*

*Journal of*

# Modern Thamizh Research

*(A Quarterly International Multilateral Thamizh Journal)*

Arts and Humanities (all), Language
Literature and Literary Theory, Tamil
UGC Care Listed (Group-I) Journal

**பன்னாட்டு கருத்தரங்கம் -2021**
சிறப்பிதழ் : **தமிழ்த்துறை**
**நல்லமுத்துக்கவுண்டர் மகாலிங்கம் கல்லூரி,**
பொள்ளாச்சி - 642 001, தமிழ்நாடு, இந்தியா

# தமிழ் இலக்கியங்களில் சொல்வளமும் பொருள்வளமும்

சிறப்பிதழ் ஆசிரியர்

**Special Issues Editor**
முனைவர் **பா. அருள்ஜோதி**
உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை

***Published by***

**RAJA PUBLICATIONS**
**10, (Upstair), Ibrahim Nagar, Khajamalai,**
**Tiruchirappalli - 620 023, Thamizh Nadu, India.**
**Mobile : +91-9600535241**
**website : rajapublications.com**

**35**

# புறப்பொருள் வெண்பாமாலைகாட்டும் மறவர் - சொல்லாய்வு

முனைவர் பா.அருள்ஜோதி
தமிழ் உதவிப்பேராசிரியர்
நல்லமுத்துக்கவுண்டர் மகாலிங்கம் கல்லூரி, பொள்ளாச்சி

ஆய்வுச்சுருக்கம்

சங்ககாலத்தில் மன்னர் முதல் மக்கள் வரை அனைவரும் போர்ப்பயிற்சியில் சிறப்பாக ஈடுபட்டிருந்தனர். வினையே ஆடவர் உயிரென போற்றிப் பாதுகாத்தனர். அவ்வகையில் மறவர் என்போர் வீரர் என வழங்கப்பட்டனர். அரசர்க்கு அடுத்து வீரர்கள் போர்க்களத்தில் வெற்றி வாகைச்சூடியுள்ளனர். மன்னர்கள் பெரும் நிலப்பரப்புகளை கைக்கொள்ளவும் உதவி புரிந்துள்ளனர். நாட்டில் மக்கள் நலமுடன் வாழ இவர்கள் அடித்தளமிட்டனர் என்றால் மிகையாகாது. இத்தகைய சிறப்புமிக்க மறவர்களைப் பற்றி புறப்பொருள் வெண்பாமாலையின் வாயிலாக ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

## முன்னுரை

சங்ககாலம் தொடங்கி இக்காலம் வரைமறவர் என்றாலேவீரர் என்னும் பொருளில் கையாளப்படுகின்றன. மனிதர்கள் குழுவாக இணைந்து கூட்டமாக வாழத்தொடங்கியது முதலே வீரயுகப்பார்வைதோன்றியதுஎனலாம். சங்ககாலம் காதலும், வீரமும் போற்றியகாலமாகும். இக்காலத்திலிருந்து தமிழரிடையேவீரம் என்பதும் போர்முறை என்பதும் பல்வேறுவடிவங்களாக மலர்ச்சி பெற்றுள்ளன. அவ்வகையில் மறவர் என்னும் சொல் புறப்பொருள் வெண்பாமாலையில் எவ்வாறு பயின்றுவந்தள்ளது என்பதை ஆய்வதாக இவ்வாய்வு அமைகிறது.

## மறவர்

மறவர் - படைவீரர், பாலைநிலமாக்கள், வேடர், மறக்குடியான், வீரன், படைத்தலைவன், கொடியோன், கள்ளன், படைத்தலைவர்'' (மதுரைத்தமிழ்ப்பேரகராதி, ப-387) குறிப்பிட்டுள்ளது. மேலும், மறக்குடி என்பதற்கு வீரகுலம், மறவர்குலம் எனவும், மறம் என்பதும் வீரம்( ப-387) எனவும் பொருள்தந்துள்ளது.

மறவர் குலத்தில் நடைபெற்ற திருமணத்தில் வாள், வழிபடுபொருளாக அமைந்தது. மறவர்க்கு வளம் தருவதுவாள் என்னும் நம்பிக்கையில் இச்சடங்குநடைபெற்றது. இதனைவாளைப் புனிதப்பொருளாகக் கருதிவழிபாடாற்றும் சடங்காகக் கொள்ள இடமுண்டு. மறக்குலத்திற்குவழிவளத்தைத் தப்பாமல் பெற்றுக் கொடுக்கும் வாளில் தெய்வம் உறைதாகநம்பினர். ஆகவே இச்சடங்கு நடைபெற்றிருக்க வேண்டும்.''(புறம்:332, ஔவைசு.துரைசாமி உரை)

''மறவர் பகைநிலம் சென்றனர். வலியவாளால் வெட்டியும் வில்லால் எய்தும் பகைவரைவிரட்டினர். அவர்களுடையபசுக்களைக் கவர்ந்தும் வந்தனர்.”( ப-60,சங்ககாலசமுதாயம்)

''இப்புராதன இனக்குழுக்கள் மலைப்பகுதிகளிலும் (குறிஞ்சி), காட்டுப் பகுதிகளிலும் (முல்லை) வாழ்ந்தனர். இவர்களிடம் கூட்டுவாழ்க்கையே நிலவியிருக்க வேண்டும். கூட்டுவாழ்க்கையின் பிரதிபலிப்பேவீரன் (Hero) என்றபடிமமாகும். இனக்குழுவுக்குத் தலைமை தாங்கி அக்குழுவுக்குரிய உணவு, இடம், பாதுகாப்பு என்பனவற்றைத் தருபவனேவீரன் எனக் கருதப்பட்டான். இனக்குழுமத்தின் கூட்டு அதிகாரத்தையே (Collective) வீரன் பிரதியீடு செய்தான். புறநானூற்றில் வரும் வீரர்கள் இவர்களே.” (ப-53) பண்டையத் தமிழர் வரலாறும் இலக்கியமும்)

"தலைவரும் வீரரும் இருந்துசமமாக உணவு உண்டனர், கள் அருந்தினர், இறைச்சி சாப்பிட்டனர், ஆடினர்,பாடினர்,அவர்களின் உணவுமுறைகள் பற்றியபாடல்கள் குறிஞ்சி பற்றியசங்ககாலப் பாடல்களிற் காணப்படுகின்றன." ((ப-53) பண்டையத் தமிழர் வரலாறும் இலக்கியமும்)

"மண்ணாசையும் போர்வெறியும் கொண்டு படையெடுக்கும் அரசர்கள் போர்க் கொடுமைகளில் ஈடுபட்டனர் எனின் மானமும் வீரமும் கொண்டுபோரிட்டஅரசர்கள் போர் அறங்களைக் கட்டிக் காத்தனர் எனலாம் படையெடுக்கும் முன் பறைஅறைந்துதன் படையெடுப்பைப் பகைவர்க்குத் தெரிவித்தல் மரபாக இருந்தது."( பக்-93,94,தமிழகவரலாறும் தமிழர் பண்பாடும்)

"வீரர்கள் வீரக்கழல் அணிந்திருந்தனர். அதில் அதைஅணிந்தாரின் வீரச்செயல்கள் பொறிக்கப்பட்டிருந்தன. அரசனும் தானைத் தலைவர்களும் உள்ளிட்டதலைமைவீரர்கள் இருவகைக் கழல்கள் அணிந்திருந்தனர். ஒன்றில் அணிந்தாரின் கொடைச் சிறப்பையும் மற்றையதில் அவரதுவீரம் அல்லதுவெற்றிகளையும் பொறித்தனர். வீரர்கள் படம் குப்பாயம் அல்லது மெய்ம்மறை என்றும் ஒருவகை அங்கியையும், காலில் செருப்பையும் அணிந்திருந்தனர்." ( 186,சங்ககாலவாழ்வியல்)

"வாளால் வாழும் வீரர்களில் இளமையிலிருந்தேமன்னனோடுவளர்ந்துவந்த இணைபிரியாது தோழமைபூண்டவர்களே வெற்றியில் சிறந்தவராகக் கருதப்படுவர். அன்றி, அரசுஎன்னும் நிலையம் தோன்றியபோதேஉடன் தோன்றிய வீரர்குடி என்றும் கூறலாம்."( சங்ககாலவாழ்வியல், ப-184)

"வீரத்தன்மை மறக்குடியினருக்கே சிறப்பாக உரியது எனல் பொருந்தும்." ( சங்ககாலவாழ்வியல், ப-168)

"போர் மனிதற்கு இயல்பானது. அதைமனிதனுடைய வாழ்க்கையின் இயற்கையான ஒருபகுதி என்று எண்ணுமளவிற்கு அதுமிகப் பழையசமுதாயநிலையம் என்னும் கருத்துகள் சங்கப்புலவர்களால் வெளிப்டையாகக் கூறப்படுகின்றன." ( சங்ககாலவாழ்வியல், ப-162)

"சங்ககாலத்தின் முற்பகுதியிலிருந்த சமூக அமைப்பும், அரசர், அந்தணர், ஏனையோர் என்ற முறையிலேயே சமூகம் அமைந்திருந்தது. இந்த முறைதமிழகத்தில் குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல் ஆகியநாலுபகுதிகளிலும் ஒரேவிதமாக விருந்ததால்,"இம்முறைமைநால்வர்க்கும் உரித்து" என்றனர். மலைநாட்டுக் குறவர்களில் வேந்தனும் அறிவர்களும் உழைக்கும் சாமானியர்களுமிருந்தனர். நெய்தல் நிலத்திலும் இந்தஅமைப்பிருந்தது. போர் செய்வதற்கென ஒருவகுப்பினர் இல்லை. அனைவரும் போர்க்காலங்களில் ஆயுதமேந்திப் போரிட்டனர்." (தமிழகவரலாறும் பண்பாடும், பேராசிரியர், வே.தி.செல்லம்) ப-116)

"பழம் தமிழரின் நாட்டார் தெய்வங்களில் முருகனையும் சேர்க்கலாம். இங்குவேல் ஆயுதமேதெய்வமாகக் கருதப்பட்டது. வேலன் வெறியாடல் என்பதுவழிபாட்டுச் சடங்குகளில் ஒன்று."( ப-73,அ.க.பெருமாள்,தமிழகப்பண்பாடு)

**"விரைபரிகடவிவில்லுடைமறவர்**
**குரைஅழல் நடப்பக் குறும்புஎறிந் தன்று"**(8)

வில்லை ஏந்தியவர் வெட்சிமறவர். அவர்கள் இயல்பாகவே விரைந்து செல்லும் தம் குதிரையைமேலும் விரைவுபடுத்துவர் முழங்குகின்றதீயளினைப் பகைவரின் ஊரின்கண் தவழும்படி செய்து அப்பகைவரின் அரணை அழிப்பர். இதுவேஊர்கொலை எனப்படும்.

**"வென்றுஆர்த்துவிறல்மறவர்**
**கன்றோடும் ஆதழீஇயன்று"**(9)

பகைவர்களை முற்றிலுமாக ஒழித்துப் பெற்றவெற்றியை உடையவர் வெட்சிமறவர்.

பகைவர்களின் ஆநிரைகளைக் கன்றுகளோடு கைப்பற்றுவர்.

"தொட்டு இமிழும் கழன்மறவர்
மட்டுஉண்டுமகிழ்தூங்கின்று"(15)

ஒலிக்கின்றவீரக்கழலைஉடையவர் வெட்சிமறவர். கள் உண்டுகளிப்பர்.

"தொடுகழல் மறவர் தொல்குடிமரபில்
படுகண்இமிழ்துடிப் பண்புஉரைத் தன்று"(19)

துடியினைமுழக்கக்கூடியதொன்மையானமுதுகுடிக்கண் தோன்றியவன்.

"படைக்குஓடாவிறல்மறவரைக்
கடைக்கொண்டுகளத்துஒழிந்தன்று"(27)

கரந்தையாரின் படைஎழுச்சிக்குஅஞ்சிஓடாமல் எதிர்த்துநின்றுபோர்புரிந்தனர் வெட்சிமறவர்.

"கூடலர்குடர் மாலைசூட்டி
வேல்திரிந்துவிரும்பிஆடின்று" ( 30)

தம்மொடு கூடி நில்லாமல் எதிர்த்து நின்றபகைவரைப் போர்க்களத்தில் வீழ்த்தினான் ஒருகரந்தைமறவன். அம்மறவரின் குடரைத்தன் வேலுக்குமாலையாகச் சூட்டினான். அவ்வேலின் நுனிஅடியாகவும் அடிநுனியாகவும் சுழற்றி ஆடினான்.

"தோள்வலியவயவேந்தனை
வாள்வலிமறவர் சிறப்புஉரைத்தன்று"(34)

தோள்வலிமையால் சிறந்துவிளங்கும் கரந்தை அரசனை,தனதுவாள் வலிமையால் சிறந்தமறவர் சிறப்பித்துப் போற்றுவர்.

"மண்திணிஞாலத்துத் தொன்மையும் மறனும்
கொண்டுபிறர் அறியும் குடிவரவு உரைத்தன்று"(35)

ஐம்பெரும் பொருள்களால் ஆன இந்நிலவுலகம். இதன்கண் பழமையும் வீரமும் கொண்டு விளங்குவது மறவர்குடியாகும்.

"மறவேந்தனில் சிறப்புஎய்திய
விறல்வேலோர் நிரைஉரைத்தன்று"(46)

வஞ்சிவேந்தனால் சிறப்பிக்கப்பட்ட வெற்றி பொருந்தியவேலினை உடையமறவர் தம் மாண்பினைக்கூறுவது.

"மடுத்துஎழுந்தமறவேந்தர்க்குக்
கொடுத்துஅளித்துக் குடிஓம்பின்று"(52)

தன்மேல் படையெடுத்துவந்தவஞ்சியரசனைக் கண்டுதானும் எதிர்த்துப் போர் செய்யாமல் அவ்வஞ்சியரசனுக்குப் பெரும்பொருளைக் கொடுத்துக் தன் குடிமக்களைத் துன்பமின்றிக் காப்பது.

"கொடுத்தபின்னர்க் கழல்மறவர்
எடுத்துஉரைப்பினும் அத்துறைஆகும்"(65)

அரசனிடமிருந்துபடைக்கருவிகளைப் பெற்றவர் வீரக்கழல் அணிந்தகாஞ்சிமறவர் தம்முடைய மாண்பினைச் சிறப்பித்துக் கூறுவர்.

"தாங்குதிறல் மறவர் தத்தம் ஆற்றல்
வீங்குபெறும் படையின் வெளிப்படுத் தன்று"(66)

பகைவராகியவஞ்சிமறவரின் படையைத் தடுக்கும் ஆற்றலினைஉடையவர் காஞ்சிமறவர்.

"முதுகுடிமறவர் முன்னுறச் சூழக்
கொதிஅழல் வேலோன் குடைசென் றன்று"(68)

தொன்றுதொட்டமறக்குடியில் பிறந்தமறவர்.

"மைந்துஉயரமறம்கடந்தான்
பைந்தலைச் சிறப்புஉரைத்தன்று"

பகைவரின் வலிமையைக் கொடுத்துத் தம் வலிமையைவெளிப்படுத்தும் படியாகப் போர்த்தொழிலைச் செய்பவன் காஞ்சிமறவன்.

"மறத்துறைமலிந்துமண்டிமாற்றார்"

போர் செய்வதில் விருப்பம் மிகுந்தவர் உழிஞைமறவர்.(104)

"பாடுஅருந்தோல் படைமறவர்" இன்னதன்மை உடையதெனச் சொல்லுவதற்குஅரியகிடுகுப் படையைஉடைய உழிஞைமறவர்.

தொடுகழல் மறவர்" (112)

வீரக்கழலினைஅணிந்தஉழிஞைமறவர்.

"கருங் கழல் மறவரொடு வெள்வளைவிறலியர்"(144)

கரியகழலினைஅணிந்தமறவர்

"அடல்வேல் ஆடவர்க்குஅன்றியும் அவ்இல் மடவரல் மகளிர்க்கும் மறம்மிகுத் தன்று"(175)

தொன்றுதொட்டுசிறந்துவிளங்குவதுமறக்குடி. அக்குடியில் தோன்றியவர் கொல்லும் வேலினை ஏந்தியமறவர். ஆவ் ஆடவரேஅல்லாமல் அக்குடிக்கண் பிறந்தபெண்களும் மறமாண்பில் சிறந்துவிளங்கினர்.

"உளம்புகலமறவேந்தன் களம்கொண்டசிறப்புரைத்தன்று"(180)

"வெள்வாள் வேந்தன் வேண்டியதுஈயவும் கொள்ளாமறவன் கொதிப்புஉரைத் தன்று" (181)

ஆராய்ந்தொடுத்தவாளினைஉடையவன் வாகைவேந்தன். அவன் தம்முடையமறவர் விரும்பியவற்றைக் கொடுக்கும் தன்மை கொண்டவன். அவ்வாறுஅரசன் கொடுப்பதை ஏற்றுக் கொள்ளாதமறவரும் உள்ளர். அம்மறவர் பகைவர்மேல் கொண்டமனக்கொதிப்பை எடுத்துரைப்பது மறமுல்லைஆகும்.

"மண்மருளத் துடிகறங்க விண்மேயாற்குக் கல்கொண்டன்று"

விழுப்புண்பட்டு இறந்தான் ஒருமறவன் . அவன் உலகம் வியக்கவும் பறைகள் முழங்கவும் விண்ணுலகத்தை அடைந்தான். அம்மறவனுக்கு ஒருகல்லைத் தேர்ந்தெடுத்துவருவர். இந்நிலையைக் கூறுவதுகற்கோள் நிலையாகும்.

"அடுதிறல் மன்னரைஅருளியஎழுகஎனத் தொடுகழல் மன்னரைத் துயில்எடுப் பின்று" ( 197)

கொல்லும் வலிமைஉடையபகைவேந்தர். அத்தன்மையோர்க்குஅருள்புரியவேண்டுமெனப் படைமறவர் வீரக்கழல் கட்டியமன்னனை உறக்கத்திலிருந்து எழுப்புவர்.

"பெய்கழல் பெருந்தகை பேணாமுயக்கு இவர்ந்து மல்குஇருள் செல்வோள் வகைஉரைத் தன்று" ( 234)

தன்னைவிரும்பாமல் நின்றான் வீரன் ஒருவன். அவன் கட்டியவீரக்கழலினையும் பெரிய தலைமையினையும் உடையவன். அவனைத் தழுவவிரும்பினான் ஒருபெண். அதன் பொருட்டு மிகுந்த இருள் செறிந்தநடுஇரவில் அவ்வீரனைநாடிச்சென்றான்.

"விறற்படைமறவர் வெஞ்சமம் காணின் மறப்போர்ச் செம்பியன் மழைபூ உரைத்தன்று" ( 242)

வெற்றியைஉடையவர் பகைப்படைவீரர். அவர்தம் வெம்மையானபோரினைக் காணுமிடத்துவீரத்துடன் எதிர்த்துப் போர் செய்யவல்லவன் சோழன். அவன் சூடும் பூவினைப் புகழ்ந்து கூறுவர்.

"அடுமுரண் அகற்றும் ஆள்உகும் ஞாட்பில் கடுமுரண் வயவன் கழல்புனைந் தன்று" (246)

முரண்பாட்டினைப் பெருக்குபவர் படைமறவர். அம்மறவர் இறப்பதற்குக் காரணமாய் இருப்பது போர்க்களம். அக்களத்தில் மிகுந்தமாறுபாடு உடையவனாய் வீரன் ஒருவன் காணப்பட்டான். அவ்வீரனின் கழலைச் சிறப்பிப்பதுகழல் நிலையாகும். இங்குவயவன் என்னும் சொல் மறவனைக்குறிப்பிட்டுள்ளது.

"நிழல்அவிர் எழில்மணிப்பூண்
கழல்வெய்யோன் கல்வாழ்த்தின்று" ( 252)

ஒளிவீசும் அழகினைஉடையமணியால் செய்தஅணிகலன்களைஅணிந்தவன் மறவன். அவன் போர் விருப்பம் கொண்டுவீரக்கழலை அணிந்துபோருக்குச் சென்று இறந்துபட்டான். அவனுக்கு எடுத்தநடுகல்லை வாழ்த்தியதுகல் முறைபழிச்சல் என்பதாகும்.

"வெந்திறலான் வியன்பாசறைவேல்வாயவ் விதிர்ப்புஎய்த
வந்துலாய்த் துயர்செய்யும் வாடையதுமலிபுஉரைத்தன்று" ( 170)

வெவ்வியவலிமையினை உடையவன் வாகையரசன். அவனோடுவேற்படைமறவர்களும் பாசறைக்கண் தங்கியிருந்தனர். அம்மறவர் நடுக்கம் அடையும்படியாகவாடைவீசித் துன்பம் செய்தது. அவ்வாடைக் காற்றின் மிகுதியினைக் கூறுவதுவாடைப்பாசறைஆகும்.

அடிக்குறிப்புகள்

1. தமிழகவரலாறும் தமிழர் பண்பாடும்,முனைவர் ந.அறிவுராஜ்,பாவைபப்ளிகேஷன்ஸ், 142, ஜானி ஜான் கான் சாலை, இராயப்பேட்டை. சென்னை -600 014, மூன்றாம் பதிப்பு -2014
2. சங்ககாலச் சமுதாயம், கா.சுப்பிரமணியன், நியூசெஞ்சுரி புக் ஹவுஸ்,சென்னை- 600 098. நான்காம் பதிப்பு : மே, 2011.
3. பண்டையத் தமிழர் வரலாறும் இலக்கியமும்,சிமௌனகுரு,அலைகள் வெளியீட்டகம்,சென்னை- 600 024.
4. சங்ககாலவாழ்வியல்-டாக்டர் ந.சுப்பிரமண்யன், இரண்டாம் பதிப்பு : ஜனவரி 2010
5. மதுரைத்தமிழ்ப்பேரகராதி இரண்டாம் பாகம், சந்தியா நடராஜன்(பதிப்பாசிரியர்) சந்தியா பதிப்பகம். முதற்பதிப்பு டிசம்பர் 2004 ப்ளாட் ஏ நியூடெக் வைபவ் 57-53, சென்னை - 83
5. தமிழகவரலாறும் பண்பாடும் - பேராசிரியர், வே.தி.செல்லம்,மணிவாசகர் பதிப்பகம், 31,சிங்கர் தெரு, பாரிமுனை, சென்னை- 600 108.மூன்றாம் பதிப்பு, ஆகஸ்ட் 2000.
6. தமிழகப்பண்பாடு (சங்ககாலம் முதல் பிற்காலச்சோழர் காலம் வரை) அ.கா.பெருமாள், டிசம்பர்.2018.

❑❑❑